பக்கங்கள் 16 + 05

மாலை முரசு
கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 வைகாசி 01 செவ்வாய்க்கிழமை 14.05.2024 அதிர்வு 288

## புலிகள் அமைப்பினருக்கு இந்தியாவில் தடை நீடிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை இந்திய மத்திய அரசு மேலும் ஐந்து ஆண்டுகளுக்குத் தடை செய்துள்ளது 04




# அம்பாறையில் இன்று தடை உத்தரவைக் காண்பித்து நினைவேந்தல் நிகழ்வைத் தடுத்து நிறுத்திய பொலிஸ்

### மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(கனகராசா சரவணன்)

அம்பாறை, பெரியநீலாவணை – பாண்டிருப்புப் பகுதியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை முன்னெடுப்பதற்குப் பொலிஸார் தடை யேற்படுத்தியுள்ளனர்.

முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்தவர்களின் நினைவாக முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி பரிமாறப்பட்டு 04

# ரணில் மீட்பர் அல்லர்; பொருளாதார அடியாள்

### சர்வதேச நிதி நிறுவனங்களின் சேவகர் என்றும் கடுமையாகச் சாடுகின்றார் ஐங்கரநேசன்



“ராஜபக்ஷ சகோதரர்கள் அரியணையில் இருந்து துரத்தப்பட்டு அவ்விடத்துக்கு ரணில் விக்கிரமசிங்க இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஜனாதிபதியாகப் பிரதியீடு செய்யப்பட்டார். அவர் ஒரு பொருளாதார நிபுணர், சரிந்திருக்கும் பொருளாதாரத்தைத் தூக்கி நிமிர்த்துவார், அடித்தட்டு மக்களின் வாழ்வு மேம்படும் என்று சொல்லியே முன்னிறுத்தப்பட்டார். ஆனால், இன்று இலங்கையின் சனத்தொகையில் கால்வாசிக்கும் அதிகமான மக்கள் வறுமையில் வாடுகின்றனர். 2019ஆம் ஆண்டு பதினொரு சதவீதமாக இருந்த வறுமை இந்த ஆண்டு இருபத்தியாறு சதவீதமாக அதிகரித்திருக்கின்றது. ரணில் மீட்பர் அல்லர். அவர் ஒரு பொருளாதார அடியாள். உலக வங்கி, நாணய நிதியம் ஆகிய சர்வதேச நிதி நிறுவனங்களின் தாழ்பணியும் ஒரு சேவகராகவே அவர் செயற்பட்டு வருகின்றார்.”

- இவ்வாறு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் கடுமையாகச் சாடியுள்ளார். 04

# யாழில் போதைப்பொருள் உற்பத்தி நிலையம் சுற்றிவளைப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், இணுவில் பகுதியில் போதைப்பொருள் உற்பத்தி நிலையம் பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டு போதைப்பொருள் உற்பத்திப் பொருட்கள் உள்ளிட்டவை கைப்பற்றப்பட்டுள்ளன.

பாடசாலை மாணவர்களை இலக்கு போதைப்பொருளை விற்பனை செய்யும் கும்பலைத் தேடிச் சென்றபோது வீடொன்றில் இயங்கிய போதைப்பொருள் உற்பத்தி நிலையம் யாழ். பிராந்திய குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவ தாவது,

ஐஸ் போதைப்பொருளுடன் யாழ்ப்பாணத் தில் இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்க ளிடம் மேற்கொள்ளப்பட்ட 04





# பிரபாகரனின் வீட்டுக்கு அருகில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வார்ப்பு

(எஸ்.நிதர்ஷன்)

முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகமும் முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்திப் பவனியும் இன்று யாழ். வடமராட்சி – வல்வெட்டித்துறைப் பகுதியில் இடம்பெற்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பூர்வீக வீட்டுக்கு அருகில், ஆலடிச் சந்தியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

அதன்போது , முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்தியில் முள்ளிவாய்க்கால் மண்ணில் உயிர்நீத்தவர்களை நினைவு கூர்ந்து இரு மாவீரர்களின் தந்தையால் பொதுச்சுடரேற்றி வைக்கப்பட்டு தொடர்ச்சியாக ஈகைச்சுடரேற்றி அகவணக்கம் செலுத்தி மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.













# மன்னாரில் கனிய மணல் அகழ்வுக்கு மக்கள் தொடர்ந்தும் எதிர்ப்புத் தெரிவிப்பு

## சுற்றுச்சூழல் தாக்கம் தொடர்பான மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்க முடியாது என்று அரச அதிபர் தெரிவிப்பு

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் ஆஸ்திரேலியாவை தளமாகக் கொண்டு இயங்கும் டைட்டானியம் சான் லிமிடெட் நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்படவுள்ள கணிய மணல் அகழ்வு தொடர்பாக பொது மக்களின் விருப்பத்தை பெற்றுக் கொள்வதற்கான ஒரு அவசர கூட்டம் நேற்றுத் திங்கட்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் டைட்டானியம் சான் லிமிடெட் நிறுவனத்தின் இயக்குனர் சாலிய உள்ளடங்களாக நிறுவனத்தின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

சுற்றுச்சூழல் தாக்கம் தொடர்பான மதிப்பீட்டை பெற்றுக் கொள்ளும் வகையில், இந்த நிறுவனத்தினர் தெரிவு செய்யப்பட்ட இடங்களுக்கு செல்லும் போது மக்கள் தொடர்ச்சியாக எதிர்ப்பையும் கண்டனத்தையும் வெளிப்படுத்தி வந்தனர்.

இந்த நிலையில் ஜனாதிபதி செயலகத்தின் வேண்டுகோளுக்கு அமைய, பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் மன்னார் பிரஜைகள் குழு, பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மீனவ அமைப்புகள், சமூக மட்ட அமைப்புகள் திணைக்கள தலைவர்கள், கலந்து கொண்டனர்.

இதன் போது ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் டைட்டானியம் சான் லிமிட்டெட் நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்படவுள்ள கணிய மணல் அகழ்வு தொடர்பாக திட்டம் தொடர்பாக மக்களுக்கு முன் வைக்கப்பட்டது. இதன் போது மன்னாருக்குக் குறித்த திட்டத்தால் பாரிய பாதிப்புகள் உள்ளமை குறித்து மக்களாலும், பொது அமைப்புகளின் பிரதி நிதிகளாலும் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டிருந்த புவியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா குறித்த திட்டம் மன்னாரில் அமுல்படுத்தும் பட்சத்தில் மன்னாரில் பாரிய பாதிப்புகள் ஏற்படும் என்ற விடயத்தை சுட்டிக்காட்டினார்.

அவரது கருத்தை வருகை தந்த பொது அமைப்புக்கள் மற்றும் கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், பிரஜைகள் குழுவினர் வரவேற்றனர்.

இதேவேளை, மன்னார் தீவில் இந்தத் திட்டத்தை அமுல்படுத்துவதை மக்கள் ஏற்றுக் கொள்ளாத காரணத்தால் மன்னார் தீவை தவிர்த்து வேறு நிலப்பரப்பில் இந்தத் திட்டம் தொடர்பான ஆய்வை மேற்கொள்ள அனுமதி வழங்குவது என்றும் மன்னார் தீவில் கனிய மணல் அகழ்வுக்கு ஆதரவு வழங்காத நிலையில் சுற்றுச்சூழல் தாக்கம் தொடர்பான மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்க முடியாது என்று பொது மக்கள் உறுதியாக உள்ள காரணத்தால் கூட்டம் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டது.

மன்னாரில் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாத காரணத்தை சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிக்கை மூலம் தெரியப்படுத்த உள்ளார் என்று அரச அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

கலந்துரையாடலில் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் மாக்கஸ் அடிகளார், பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் உட்பட சமூக மட்ட பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.



# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்








## யாழில்....

விசாரணைகளைத் தொடர்ந்து போதைப் பொருள் உற்பத்தி நிலையம் நேற்று முற்றுகையிடப்பட்டது.

குறித்த நிலையம் இரசாயன ஆய்வு கூடத்தைப் போன்று வடிவமைக்கப்பட்டு இரசாயனங்களைப் பயன்படுத்தி போதைப்பொருள் உற்பத்தி நடைபெற்றுள்ளது என்று சட்ட வைத்திய அதிகாரி இன்று நேரில் சென்று பார்வையிட்டு உறுதிப்படுத்தினார்.

வாள்வெட்டு கும்பல் ஒன்றில் இயங்கும் ஒருவருக்குச் சொந்தமான வீட்டிலேயே குறித்த நிலையம் இயங்கியுள்ளது. அதனைப் பொலிஸார் முற்றுகையிட்டபோது அங்கு எவரும் இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், போதைப்பொருள் ஆய்வுகூடத்தில் பிரதான குற்றவாளிகளைத் தேடி பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலதிக விசாரணைகளுக்காகக் குறித்த பகுதி பொலிஸாரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதுடன் கொழும்பில் இருந்து இரசாயனப் பகுப்பாய்வு பிரிவினரை அழைத்து விசாரணை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## ரணில்...

பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகளை வழங்கி வைக்கும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் அற்றார் அழிபசி தீர்த்தல் நிகழ்வு நல்லூரில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே பொ.ஐங்கரநேசன் மேற்கண்டவாறு சாடியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றும்போது,

"இலங்கையின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் 2019ஆம் ஆண்டில் 6 ஆயிரத்து 966 ரூபாவாக இருந்த தனி நபர் ஒருவரின் அடிப்படைத் தேவைகளுக்கான மாதாந்தச் செலவு இப்போது 17 ஆயிரத்து 14 ரூபாவாக உயர்ந்துள்ளது எனத் தெரிவித்துள்ளது.

உலக வங்கி தன்னுடைய அறிக்கையில் இலங்கையில் அறுபது வீதமான குடும்பங்களின் வருமானம் வீழ்ச்சி அடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளது. வாங்கும் திறன் குறைந்ததால் உணவுப் பாதுகாப்பின்மை , ஊட்டச் சத்துக் குறைபாடு, வளர்ச்சிக் குறைபாடு என்பவற்றை மக்கள் எதிர்கொள்ளத் தொடங்கியுள்ளார்கள்.

பொருளாதார மறுசீரமைப்பு என்ற பெயரில் சர்வதேச நாணய நிதியம் விதிக்கும் கட்டளைகளைச் சிரமேற்கொண்டு அரசு நடைமுறைப்படுத்துகின்ற வரி விதிப்பு முறைகள், அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் எல்லாம் சேர்ந்து சமூகத்தின் மீது தொடுத்திருக்கும் தாக்குதலின் விளைவுகள்தான் இவை.

நாணய நிதியத்தின் சொற்கேட்டு அரச நிறுவனங்களைத் தனியார்மயமாக்கும் நடவடிக்கைகளினாலும், மூடும் நடவடிக்கைகளினாலும் இலட்சக் கணக்கான மக்களின் வேலைகளை இல்லாதொழிக்கும் நடவடிக்கைகளில் ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டு வருகின்றார்.

நாளுக்கு நாள் வேலை இல்லாதவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டிருக்கின்றது. ஆனால், அமெரிக்கப் பேரரசு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதார நடவடிக்கைகளை அவ்வப்போது வானளாவப் புகழ்ந்து தள்ளுகின்றது. இதன்பொருள் ரணில் நிறுவனங்களுக்கும் பெரும் பன்னாட்டு வணிக நிறுவனங்களுக்கும் இவற்றுக்கூடாகத் தங்களுக்கும் சிறந்த சேவகராக, ஒரு பொருளாதார அடியாளாக இருக்கின்றார் என்பதுதான்.

ரணில் விக்கிரமசிங்கவை அடிக்கடி வெளிப்படையாகப் பாராட்டுவதன் மூலம் அவரை ஒரு பொருளாதார மீட்பராக மக்கள் மத்தியில் கட்டமைக்க அமெரிக்கா விரும்புகின்றது. ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் சமயத்தில் இந்த விம்பம் அவரை வெல்ல வைக்கும் என்றும் அமெரிக்கா நினைக்கின்றது.

இலங்கையின் ஜனாதிபதியாக யார் வர வேண்டும் என்பதை வல்லாதிக்க சக்திகளே தீர்மானிக்கின்றன. அதற்கேற்ப மக்களை, வாக்காளர்களை, மக்கள் பிரதிநிதிகளை மூளைச்சலவை செய்யும் வேலைகள் கனகச்சிதமாக இப்போது நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. எமது மக்கள் இவற்றைப் புரிந்துகொள்ள வேண்டும்." – என்றார்.

## புலிகள்...

என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டத்தின் கீழ் இந்தத் தடை நீடிக்கப்பட்டுள்ளது என்று இந்திய மத்திய அரசு தெரிவித்துள்ளது.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி 1991ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் இயக்கத்தை இந்திய மத்திய அரசு தடை செய்தது.

இந்தத் தடை ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கும் நீட்டிக்கப்பட்டு வருகின்றது.

இந்தியத் தேசிய பாதுகாப்புக் கருதி விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு 1992ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் திகதி இந்தியாவில் முதன் முதலில் தடை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## அம்பாறையில்...

வடக்கு, கிழக்கில் நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில், இன்று கல்முனை, பாண்டிருப்பு அரசடி அம்மன் ஆலய முன்றலில் அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தினர் பொதுமக்களுடன் இணைந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறும் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது சம்பவ இடத்துக்கு வருகை தந்த பெரியநீலாவணை பொலிஸார் கல்முனை நீதிவான் நீதிமன்றத் தடை உத்தரவைக் காண்பித்து குறித்த நிகழ்வை நிறுத்துமாறு தடையேற்படுத்தினர்.

இவ்வாறான நிலையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கலைச் செய்ய முடியாத ஏற்பாட்டாளர்கள் அங்கிருந்து வெளியேறி கல்முனை மனித உரிமை ஆணைக்குழுவுக்குச் சென்று தமக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பில் முறைப்பாடு செய்தனர்.




# தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் ஊழியர்களும் நேற்றுப் போராட்டம்!

(எம். எப்.நவாஸ்)

நாடளாவிய ரீதியில் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் போராட்டம் இடம்ற்றெு வரும் நிலையில் தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர்களும் நேற்று (13) போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தென் கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர் சங்க தலைவர் எம்.ரி.எம். தாஜுடீனின் தலைமையிலும் ஊழியர் சங்கத்தின் செயலாளர் எம்.எம். முகமது காமிலின் வழிகாட்டலிலும் இடம்பெற்ற போராட்டத்தில் ஊழியர்கள் கலந்து கொண்டு ஆக்ரோஷமான கோஷங்களை முன்வைத்தனர்.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் எதிர்பார்க்கும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அதற்காக நீண்ட காலமாக போராடிவரும் நிலையில் அவர்களது போராட்டம் தற்போது தொடர் போராட்டமாக உருவெடுத்துள்ளது.

இங்கு ஊழியர் சங்க தலைவர் உள்ளிட்ட பிரதிநிதிகள் கருத்துத் தெரிவிக்கையில்,

நாங்கள் சொகுசு தேவைகளுக்காக போராடவில்லை. எங்களது போராட்டம் வாழ்வாதாரத்துக்கான போராட்டம். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நிலவரங்களின் காரணமாக எங்களது ஊழியர்கள் தங்களது வாழ்வை கொண்டு செல்ல மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

ஒரே நிறுவனத்தின் பணியாற்றும் ஒரு தரப்பினருக்கு சம்பள அதிகரிப்பை வழங்கிவிட்டு, எங்களுக்கு வாக்குறுதி தந்து, அரசு ஏமாற்றி வருகின்றது. எங்கள் விடயத்தில் அரசு பாகுபாடாக நடந்துள்ளது. இது அப்பட்டமான உண்மை.

பல்கலைக்கழக கட்டமைப்பில் பட்டதாரிகளை உருவாக்குவதில் கல்விசாரா ஊழியர்களின் பங்கு என்பது பிரதானமாகும். நாங்களும் பல்கலைக்கழக செயற்பாட்டுக்கு பங்களிப்பவர்கள் என்பதை குறித்த தரப்பினர் உணர்ந்து கொள்ள வேண்டும். அத்துடன் எங்களது கோரிக்கைகள் தொடர்பில் அரசுக்கு அனைவரும் அழுத்தங்களை பிரயோகிக்க முன்வர வேண்டும்.

இன்று தலைநகரில் பல்கலைக்கழக ஊழியர்களின் ஒன்றிணைந்த போராட்டம் இடம்பெற்றிருந்த நிலையில் இன்றும் வாக்களிக்கப்பட்ட 107 வீத சம்பள அதிகரிப்பை வழங்கு, உறுதியளித்த 25 வீத எம்.சி.ஏ. கொடுப்பனவை வழங்கு என்பன போன்ற பல்வேறு கோரிக்கைகளுக்கு அரசு தீர்வை தர வேண்டும்.–என்று தெரிவித்தனர்.





நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தலையாய பிரச்சினை

ஆஸ்திரேலியாவிலேயே முதன்முறையாக தெற்கு மாகாணத்தில் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் சமூக ஊடகங்கள் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று செய்தி வெளியாகியுள்ளது.

இன்றைய நவீன உலகில் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தாமல் வாழவே முடியாது என்ற நிலைமை.

அந்த வகையில் நம்மைப் பீடித்த பிணியாக மாறி வருகிறது இந்த சமூக ஊடகப் பாவனை. சமூக ஊடகங்கள் மனித வாழ்வியல் உயர்வுக்கும், மேம்பாட்டுக்கும் அளப்பரிய வகையில் உதவும் அதேசமயம், அதன் பாவனையால் சமூகத்தில் பல்வேறு தீமைகளும் தாராளமாக ஏற்படுகின்றன.

அதில் முக்கியமானதுதான் சிறுவர்,சிறுமியர் சமூக ஊடகங்களுக்கு அடிமையாகி தங்கள் வாழ்வையும் எதிர்காலத்தையும் தொலைப்பதும், தவறான பாதைகளுக்கு இட்டுச் செல்லப்படுவதுமாகும்.

''குழந்தைகளின் உடல் ஆரோக்கியம், மன வளர்ச்சிக்கு சமூக ஊடகங்கள் பெரும் தீங்கு விளைவிக்கின்றன். மேலும் சமூக ஊடகங்களிலேயே அவர்கள் மிகுதியான நேரத்தை வீணடிக்கின்றனர்'' என தெற்கு ஆஸ்திரேலியாவின் பிரதமர் பீட்டர் மலினஸ்காஸ் அறிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்கள் மற்றும் இளம் பருவத்தினரிடையே அதிகரித்துள்ள சமூக ஊடக அணுகலுக்கான கையடக்கத் தொலைபேசி பாவனை, அடிமைத்தனமாக மாறி, அது இன்றி வாழமுடியாது என்ற நிலைமையை ஏற்படுத்தியிருக்கின்றமையை அவதானிக்க முடிகிறது.

இலங்கையில் வருடாந்தம் சிறுவர்கள் தொடர்பான சுமார் 5,000 குற்றச்செயல்கள் பதிவாகும் நிலையில், போதைப்பொருள் பாவனை மற்றும் கைத்தொலைபேசிகளின் பாவனையே இவ்வாறான குற்றங்களுக்கு வழிவகுப்பதாக பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் முன்னர் தெரிவித்திருந்த தகவல் கவனத்துக்குரியதாகின்றது.

இலங்கையில் சுமார் 10 லட்சம் சிறுவர்கள் கையடக்கத் தொலைபேசிகளுக்கு அடிமையாகியுள்ளனர் எனத் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையை மேற்கோள் காட்டி இப் பகுதியில் ஏற்கனவே சுட்டிக்காட்டியிருந்தோம்.

ஸ்மார்ட் கைத்தொலைபேசியும், அதனால் உருவான சமூக ஊடகப் பாவனையும் நம் சமுதாயத்தைப் பற்றிப் பீடிக்கத் தொடங்கி தசாப்தகாலம் கடந்து விட்டாலும், அந்த வலையில் நமது சிறுவர் உலகம் வீழத் தொடங்கி சில வருடங்கள்தானாகின்றன. ஆனால், குறுகிய காலத்தில் பெருங் கபளீகரம் என்பதுதான் நிலைமை.

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலால் சமூக அசைவியக்கம் தடைப்பட்ட போதுதான் சமூக ஊடகப் பாவனை நமது சிறுவர் உலகுக்குள் பெற்றவர்களாலும் மற்றவர்களாலும் வெற்றிலை வைத்து வரழைக்கப்பட்டு நிலை நிறுத்தப்பட்டது. அப்போது அறிமுகப்படுத்தப்பட்ட நிகழ்நிலை கல்வி முறைமை தற்போது வரையிலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் காரணமாக மாணவர்கள் மத்தியில் கையடக்கத் தொலைபேசி பாவனை அதிகரித்தது. தற்போது கல்வி நடவடிக்கைகள் தவிர்ந்து ஏனைய விடயங்களுக்கே கையடக்கத் தொலைபேசிகள் அதிகளவில் பயன்படுத்தபடுகின்றன என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் உதயகுமார அமரசிங்க தெரிவிக்கின்றார்.

2020ஆம் ஆண்டு - கொரோனா நெருக்கடி காரணமாகக் கல்வி நடவடிக்கைகளுக்காக மாணவர்களின் கைகளுக்கு கிடைத்த கையடக்கத் தொலைபேசிகள் ஊடாக இப்போது அதற்கு அப்பால் டிக்டொக், யூடியூப், இன்ஸ்டாகிராம் என பல்வேறு தளங்கள் தாராளமாக அணுகப்படுகின்றன. இந்த நிலையில், அசாத்தியமான புகைப்படங்கள் பகிர்வு, காணொலிகள் பகிர்வு, அதனூடான மோசடி மற்றும் முறைகேடுகள் குறித்தும் தமக்கு பல்வேறு முறைபாடுகள் கிடைத்துள்ளன என அவர் சுட்டிக்காட்டினார்.

அதேநேரம், தொலைபேசிகளுக்கு அடிமையான பிள்ளைகள் உளவியல் ரீதியான பாதிப்புகளை எதிர்கொள்கின்றமையுடன், நடத்தைகளிலும் பிறழ்வு ஏற்படுவதாக அவர் உறுதிப்படுத்தினார்.

ஸ்மார்ட் போன்களின் பயன்பாடு வகுப்பறைகளில் கற்றல் நடவடிக்கைகளை சீர்குலைக்கும் என கண்டறியப்பட்டுள்ளது. 14 நாடுகளில் ஆரம்ப கல்வி முதல் உயர் கல்வி வரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி ஸ்மார்ட் போன்கள் மாணவர்களை கற்றல் நடவடிக்கையில் இருந்து திசை திருப்புவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. ஒருமுறை இவ்வாறு கவனம் திசைதிருப்பப்படும் போது மாணவர்கள் கற்றுக்கொண்ட விடயங்களில் கவனம் செலுத்துவதற்கு 20 நிமிடங்கள் வரை ஆகலாம் என தெரிவிக்கப்படுகிறது.

அதேபோன்று கையடக்கத் தொலைபேசி பாவனையை பாடசாலைகளில் இருந்து அகற்றுவதன் மூலம் கற்றல் விளைவுகளை மேம்படுத்த முடியுமென பெல்ஜியம், ஸ்பெயின் மற்றும் பிரித்தானியாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது. இந்த நிலையிலே, தொழில்நுட்பத்தை வகுப்பறையில் மாத்திரம் பயன்படுத்த வேண்டுமென யுனெஸ்கோ அமைப்பு அனைத்து நாடுகளுக்கும் அறிவுறுத்தியுள்ளது.

இது விரைந்து கவனித்துத் தீர்வு காணப்பட வேண்டிய ஒரு பிரச்சினை.





# சுவாமி விபுலானந்தர் ஆண்டை முன்னிட்டு கணேஷா அறநெறி மாணவரின் போட்டிகள்

(வி.ரி. சகாதேவராஜா)

அம்பாறை மாவட்ட திருநாவுக்கரசு நாயனார் குருகுல அறநெறி பாட சாலைகளில் ஒன்றான திருக்கோவில், விநாயகபுரம் ஸ்ரீ கணேஷா அறநெறி பாடசாலை மாணவர்களிடையே பாரம் பரிய கலை, கலாசார விளையாட்டு நிகழ்வுகள் நேற்று முன்தினம் நடை பெற்றன.

இந்த நிகழ்வு திருக்கோவில் உதய சூரியன் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

ஸ்ரீகணேசா அறநெறி பாடசாலை நாடத்திய இந்தச் சித்திரை விளையாட்டு போட்டி நிகழ்வு சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு நினைவாக நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்தின் பணிப்பாளர் க.இராஜரத்தினம் மற்றும் திருக்கோவில் கோட்ட கல்விப ்பணிப்பாளர் சோ. ரவீந்திரன், ஆசிரியர்களான ஜனா , தர்மசீலன் மற்றும் அறநெறி ஆசிரி யர்கள், பெற்றோர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.





# சாய்ந்தமருது காரியப்பர் வித்தியாலயம் சுற்றுமதிலின்றிப் பாதுகாப்பற்ற நிலையில்!

(எம்.எம்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருதில் எம்.எஸ். காரியப்பர் வித்தியாலயம் மிகவும் பின்தங்கிய ஒரு பாடசாலையாகக் காணப்படுகிறது. மீள்குடியேற்றப்பட்ட மக்களின் பிள் ளைகள் அதில் கல்வி கற்கின்ற னர்.

இந்தப் பாடசாலையில் 100 மீற்றர் நீளமான சுற்றுமதில் உடைந்த நிலை யில் காணப்படுகிறது.

இவ்வாறான நிலையில் அந்த சுற்றுமதில் கட்டப்படாமையால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்று பாடசாலைச் சமூகத்தினர் தெரிவிக் கின்றனர்.

பல அரசியல்வாதிகளிடம் இந்தச் சுற்றுமதிலைக் கட்டித் தருமாறு பாட சாலையின் அதிபர் எம்.எஸ்.எம்.ஆரிப் பல தடவைகள் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்தார். ஆனால், இது விடயமாக எந்த அரசியல்வாதியும் அக்கறை செலுத்தவில்லை என்று கவலை தெரிவித்துள்ளார்.

மிகவும் பின் தங்கிய பாடசாலையாக காணப்படும் சாய்ந்தமருது பொலிவேரி யின் எம்.எஸ். காரியப்பர் வித்தியால யத்தின் சுற்றுமதிலை அமைத்துக் கொடுக்க அரசியல்வாதிகள் முன் வரவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.





# இந்த ஆண்டில் 20 புனிதத் தலங்களை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு முடிவு

இந்த ஆண்டு 20 புனிதத் தலங்கள் வர்த்தமானியில் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது எனத் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வருடம் 09 வழிபாட்டு தலங்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன என்று திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, அம்பாந்தோட்டை உத்த கந்தர ரஜமஹா விகாரை, குருநாகல் தம்பதெனிய ரஜமஹா விகாரை, மொனராகலை பிரிவு பியங்கல ரஜ மஹா விகாரை, புத்தளம் வெஹெரகல ரஜமஹா விகாரை, நுவரெலியா பம்பரகலே ரஜமஹா விகாரை, கொழும்பு படபொத ஸ்ரீ சுதர்ஷனாராம புராண விகாரை, அம்பாந்தோட்டை வாந்துருப்ப தேரபுத்தாகய ரஜமஹா விகாரை, கேகாலை கடிகமுவ ஸ்ரீநாகவனாராமய மற்றும் மாத்தளை க்ஷேத்திராராம ரஜமஹா விகாரை என்பன வர்த்தமானியால் வெளியிடப்பட்டவையாகும்.

இந்த முறை அரச வெசாக் பண்டிகை மாத்தளை நகரத்தை மையமாகக் கொண்டு மே 21 முதல் மே 27 வரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. மாத்தளை க்ஷேத்ராராம ரஜமஹா விகாரையை வழிபாட்டுத் தலமாக அபிவிருத்தி செய்வதற்கான சன்னஸ் பத்திரம் வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம் பெறவுள்ளது.

அம்பாந்தோட்டை ஹேனேகடுவ ரஜமஹா விகாரை மற்றும் குருநாகல் கொன்னவ ஸ்ரீ விஷ்ணு கோவில், கம்பஹா தடகமுவ சுமித்த ஸ்ரீ சுந்தராராமய சட்ட மூலத் தொகுப்பாளர் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவிடம் கையொப்பத்துக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பௌதீகதிட்டமிடல்திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

புனிதத் தலத்தை அறிவிக்கும் போது 03 அளவு கோல்களின்படி அது நடைபெறுவதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சுட்டிக்காட்டினார். தேசிய பருவ கால மற்றும் பிரதேச முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

இதுவரையில் கிடைக்கப்பெற்ற கோரிக்கைகளை புனிதத் தலங்களாகப் பிரகடனப்படுத்துமாறு ஆராய்ந்து பிரச்சினைக்கு உரிய நிலைமைகளை ஆராய்ந்து பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு ஏற்கனவே பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2023 ஆம் ஆண்டில் 19 புனிதத் தலங்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன என்று பௌதீக திட்டமிடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் இதுவரை 130 புனிதத் தலங்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன. 1961 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 16 ஆம் திகதி இலங்கையின் முதல் புனிதத் தலமாக கதிர்காமம் அறிவிக்கப்பட்டது. இம்மாதம் மாத்தளை க்ஷேத்ராராம ரஜமஹா விகாரை இலங்கையின் 130 ஆவது புனிதத் தலமாக வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டது.

புனிதத் தலங்கள் வர்த்தமானியில் வெளியிடுவதற்கு தொல்பொருள் திணைக்களம் மற்றும் புத்தசாசன அமைச்சின் அனுமதி மற்றும் நில அளவைத் திட்டம் அவசியம் என தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.



# சந்நதி - கதிர்காமம் பாதயாத்திரை குழு இன்று உமையாள்புரத்தை அடைந்தது!

(வி.ரி.சகாதேவராஜா)

சந்நதி கதிர்காமம் பாதயாத்திரை குழுவினர் மூன்று நாள்களில் பளையை சென்றடைந்தனர். அங்கு அவர்களுக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை (11) இலங்கையின் மிக நீண்ட பாத யாத்திரை யாழ்ப்பாணம் தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் இருந்து ஆரம்பமானது.

இன்று (14) செவ்வாய்க்கிழமை நான்காவது நாள் குழுவினர் இயக்கச்சி சென்று ஆனையிறவு பாலத்தினூடாக உமையாள்புரத்தைச் சென்றடைந்தனர்.








**வன்னி இறுதிப் போரின் சர்வதேச சாட்சியாளர்:**

# ‘மேரி கொல்வின்’ துணிகரமான பெண் பத்திரிகையாளர் !

■ **நவீனன்**

வன்னியில் இறுதிக்கட்ட போர்க் காலங்களில் ஈழத் தமிழர்களிற்காக ஓங்கி ஒலித்த சர்வதேச பத்திரிகையாள்களின் குரல்களில் இவரின் குரலும் ஒன்று. தற்போது அவர் குரல் ஓய்ந்தாலும் தமிழினத்தின் நெஞ்சங்களில் இவர் நிரந்தரமாய் வாழ்கின்றார். அவர் தான் மேரி கொல்வின் எனும் துணிகரமான பெண் பத்திரிகையாளர்.

எங்கோ பிறந்து, யாருக்காகவோ உழைத்து, எங்கோ இறந்து போன கொல்வினின் வாழ்க்கையானது தமிழ் ஊடகவியலாளர்களுக்கு முன்னுதாரணமாக அமைகின்றது.

ஈழ விடுதலைப் போராட்டத்தை உலகளாவிய அளவில் வெளியில் எடுத்துச் சென்றவரும் இறுதி இன அழிப்பின் சாட்சிகளில் ஒருவருமான மேரி கொல்வின் அம்மையாரின் வரலாற்றைப் பேசும் “A Private War” திரைப்படம் ஈழத் தமிழர்களின் போர்க்கால உண்மையை உலகுக்கு வெளிக்காட்டியது.

“அது ஓர் அவசரமான அழைப்பு. ஆனால், சில மணிநேரத்தில் இறக்கப் போகும் ஒருவரின் அழைப்பு போன்று அது இருக்கவில்லை...” என்று தொடங்கி மேரி கொல்வின் எழுதிய கட்டுரை இன்றைக்கும் இறுதிப் போர்க் குற்றத்தின் சாட்சியாக ஒலித்துக் கொண்டே இருக்கிறது. இறுதிப் போர் முடிந்த பிறகும், அவருக்கு மிரட்டல்கள் வந்தன. அதை அவர் பொருட்படுத்தவில்லை. தொடர்ந்தும் தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்தார்.

உலகத் தமிழர்களின் உள்ளத்தில் என்றும் நினைவிருக்கும் போர்ச் சூழல் ஊடகவியலாளர் மேரி கொல்வின் அம்மையார் சிரியாவில் 22.02.2012 கொல்லப்பட்டார்.

**அப்பாவி தமிழர்களின் அபயக் குரல்**

அப்பாவிகளின் அபயக் குரல் எங்கெல்லாம் கேட்கிறதோ, அங்கு தனது இருப்பைப் பதிவு செய்பவர் பத்திரிகையாளர் மேரி கொல்வின். அல்லட்படும் மக்களின் துயரத்தை உலகத்தின் கண்களுக்கு வெளிச்சம் போட்டு காட்டிய ஊடகவியலாளரே அவர்.

வன்னியில் இறுதிக்கட்ட போர்க் கால தமிழின அழிப்பில் ஐ.நாவின் பங்கை உலகறிய செய்த நேரடிச் சாட்சியும் “வெள்ளைக் கொடி” விவகாரத்தின் அனைத்துலக சாட்சியுமான மேரி கொல்வின் தனது வாக்கு மூலத்தையும் உலகறியச் செய்துள்ளார்.

மேரி கொல்வின் தனது சுய வாக்குமூலத்தில் “2001 ஆம் வருடம் வன்னியிலிருந்த ஐந்து லட்சம் தமிழர்களின் அவல நிலையை அறிவதற்காய் அவர்களின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் நான் நுழைந்தேன். அங்கு நான் செல்வதற்கு இலங்கை அரசு அனுமதி மறுத்ததால் சிறு விளக்குகளின் ஒளியுடன், பல முட்கம்பி வேலிகளை தாண்டி, இடுப்பளவு தண்ணீரில் காட்டுப் பாதையில் பயணம் செய்தேன்.

அனைத்துலக சாட்சிக் குரல்

எனை இனம் கண்டுகொண்ட படையினர் என்மீது துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டனர்.

நான் ஒரு பத்திரிகையாளர் எனக் கத்தியபோதும் அவர்கள் அதை ஒரு பொருட்டாய் எடுத்துக் கொள்ளவேயில்லை.

கைக்குண்டுகள் கொண்டு எனை தாக்கிய

**தொடர்ச்சி▼**




# ‘மேரி கொல்வின்’ துணிகரமான பெண் பத்திரிகையாளர் !

தொடர்ச்சி▲

அவர்களின் முன்னால் நான் சென்றபோது நெஞ்சில் குண்டுக் காயங்களிலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது.

அக்காயங்களுடனேயே எனை தாக்கிய படையினர் மிலேச்சத் தனமாக எனை அவர்களின் கனரக வாகனம் ஒன்றுக்குள் தூக்கி எறிந்தார்கள்.” இலங்கைப் படைகளின் தாக்குதலால் தன் கண் ஒன்றை இழந்த மேரி கொல்வின் அம்மையாரின் கூற்றே இதுவாகும்.

ஈழத் தமிழர்களுக்காக ஒலித்த சொற்ப சர்வதேச பத்திரிகையாளர்களின் குரல்களில் இவரின் குரலும் ஒன்று. தமிழினத்தின் நெஞ்சங்களில் இவர் நிரந்தரமாய் வாழ்கின்றார்.

**சிரியாவில் 2012 இல் படுகொலை**

இலங்கை, ஆப்கானிஸ்தான், செச்னியா, ஈராக், லெபனான் உட்பட உலகின் மிகவும் கொந்தளிப்பான பகுதிகளில் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த போதிலும் மேரி கொல்வின் தனது மனிதாபிமானத்தை ஒருபோதும் இழந்துவிடவில்லை.

2012 பெப்ரவரி 22 ஆம் திகதி அவர் சிரியாவில் கிளர்ச்சியாளர்களின் பிடியிலிருந்த ஹொம்ஸ் நகரில் கொல்லப்பட்டார். அவர் இருந்த இடத்தை இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்தப்பட்டது.

அவர் ஓர் சர்வதேச பத்திரிகையாளர் என்பதால் அவரை மௌனமாக்குவதற்காக இலக்கு வைத்து கொல்லப்பட்டார் என்று பின்னர் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதல் தற்செயலாக இடம்பெற்ற விடயமல்ல. அது ஒரு திட்டமிட்ட படுகொலை என்றே அறியப்படுகிறது.

**கிழக்கு திமோரில் பெண் குழந்தைகளை காப்பாற்றிய மேரி**

மேரி கொல்வின் 1999 ஆம் ஆண்டு கிழக்கு திமோரில் முகாமொன்றில் சிக்குண்டிருந்த 1500 பெண்கள் குழந்தைகளை காப்பாற்றினார். அங்குள்ள அகதி முகாமிலிருந்து ஆண்கள் தப்பியோடிவிட்ட நிலையில் மேரிகொல்வினை அங்கிருந்து வெளியேறுமாறு அதிகாரிகள் உத்தரவிட்ட போதிலும் அவர் அதனை ஏற்க மறுத்தார். மக்களின் சேவகனாக கடமை புரிந்த மேரி, தனது செய்திகளில் அவர் இந்த செய்தி குறித்தே அதிகம் பெருமைப்படுவார்.

இளம் பத்திரிகையாளர்கள் விடயத்தில் அவர் மிகவும் பெருந்தன்மையுடன் நடந்து கொண்டார். அவர்களை தனது பாதையில் பயணிப்பதற்கான உத்வேகத்தை எப்போதும் வழங்கினார். மேரி கொல்வின் உயிரிழப்பதற்கு சில நாட்களிற்கு முன்னர் இளம் பத்திரிகையாளர் ஒருவர் அவருக்கு ஒரு மின்னஞ்சலை அனுப்பியிருந்தார்.

அதில் மேரிகொல்வினின் சிரியா குறித்த அச்சமூட்டும் செய்திகள் தன்னையும் ஒரு பத்திரிகையாளராக மாற்றியது என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

சர்வதேச ரீதியில் இளம் பத்திரிகையாளர்களை முன்னோக்கி நகர்த்துவது மிகவும் கடினமான பணியாயினும், பல்வேறு போர்க் களங்களில் தனது உயிரை துச்சமென மதித்து மற்றய ஊடகவியலாளர்களுக்கு உறுதுணையாக இருந்தார்.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை உலகளாவிய அளவில் வெளியில் எடுத்து சென்றவரும் இறுதி இன அழிப்பின் சாட்சிகளில் ஒருவருமான மேரி கொல்வின் அம்மையாரின் வரலாற்றைப் பேசும் “யு சளையவந றுயச” திரைப்படமும், எங்கள் மக்களின் துயரத்தை உலகுக்கு உண்மையை வெளிச்சமாய் காட்டியுள்ளது.

மேரி கொல்வின் சிரியாவில் கொல்லப்பட்டு பதினொரு வருடங்கள் ஆகின்றன. மக்களுக்காக குரல் கொடுத்த அவர், சிரியாவில் வைத்து 2012 பெப்ரவரி 22 இல் படுகொலை செய்யப்பட்டாலும் தமிழினத்தின் நெஞ்சங்களில் அவர் நிரந்தரமாய் என்றும் வாழ்கின்றார்.



# காரைதீவு கண்ணகை அம்மன் பாரம்பரிய கல்யாணக்கால் நடல்!

(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த திருக்குளிர்ச்சி சடங்கு நேற்று (13) திங்கட்கிழமை மாலை கடல் நீர் எடுத்து, கல்யாண கால் முறித்து நடுதலுடன் ஆரம்பமானது.

முன்னதாக ஆலயத்தில் தர்மகத்தாக்கள், கப்புகனார்கள் நிர்வாகிகள் சேர்ந்து விசேட பூஜை வழிபாடு இடம் பெற்று, பாரம்பரிய மரபு முறைப்படி பறை அடித்து கடற்கரைக்கு சென்று அங்கு விசேட பூஜை இடம் பெற்று கடல் தீர்த்தம் எடுக்கப்பட்டது.

அங்கிருந்து நேராக வீதி முழுவதும் நடை பாவாடை விரிக்கப்பட்டு, கல்யாண கால் (பூவரசு மரக்கிளை) முறித்து எடுக்கப்பட்டு, பக்தர்களால் ஆலயத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

ஆலயத்தில் அதற்கான சடங்குகளை செய்து உரிய வேளையில் அரோகரா கோஷம் மற்றும் குரவை ஒலிக்கு மத்தியில் கல்யாணக்கால் நடப்பட்டது.

ஆயிரக்கணக்கான மக்கள் கூறைச் சாறிகளை அம்மனின் கல்யாண காலுக்கு சாத்தி வழிபட்டார்கள். மேலும் பலகாரங்கள் வெற்றிலை பாக்கு நைவேத்தியம் வைத்து வழிபட்டார்கள்.

ஆலய தர்மகத்தாக்களான பரமலிங்கம் இராஜமோகன், இரா.குணசிங்கம், சா.கங்காதரன் தலைமையில் இந்த முதல் நாள் சடங்கு நடைபெற்றது.

நேற்று திங்கட்கிழமை ஆரம்பமாகிய இந்தச் சடங்கு தொடர்ந்து 08 தினங்கள் நடைபெற்று 21ஆம் திகதி செவ்வாய்க் கிழமை அதிகாலை 4.30 மணிக்கு திருக்குளிர்த்தி பாடலுடன் நிறைவடையும்.

இன்று 14 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மாலை சடங்குப்பூஜையும் ஊர்சுற்றுக்காவியம் பாடலும் இடம்பெறும்.

தொடர்ந்து நாளை புதன்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமைவரை தொடர்ந்து பகல் ஒரு மணிக்குப் பூசையும் மாலை 7மணிக்கு சடங்குப் பூசையும் ஊர்சுற்றுக்காவியம் பாடலும் இடம்பெறும்.

20 ஆம் திகதி திங்கட்கிழமை பொங்கலுக்கான நெல் குத்தும் வைபவம் நடைபெறும். மறுநாள் 21 ஆம் திகதி செவ்வாய் அதிகாலை குளிர்த்தி பாடப்பெறும்.

எட்டாம் சடங்கு 27ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 7மணிக்கு இடம்பெறும்.







# உப்போடை விவேகானந்த மகளிரில் விவேகானந்தரின் உருவச் சிலை!

## அடிக்கல் நடும் நிகழ்வுகள் நேற்று

(பழுவூரான்)

மட்டக்களப்பு விவேகானந்தா நலன்புரிச் சங்கத்தின் அனுசரணையுடன் கல்லடி உப்போடை விவேகானந்தா மகளிர் கல்லூரி வளாகத்துக்குள் சுவாமி விவேகானந்தரின் உருவச சிலையை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை (13) இடம்பெற்றது.

மட்டக்களப்பு கல்லடி உப்போடை ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் பொது முகாமையாளர் சுவாமி நீலமாதவானந்தர் மகராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், சுவாமி விவேகானந்தரின் உருவச் சிலையை நிறுவுவதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு பூஜை வைபவங்களுடன் இடம் பெற்றது.

இதன்போது கல்லூரி அதிபர் நவகீதா தர்மசீலன், சுவாமி விவேகானந்தா நற்பணி மன்றத்தின் சார்பில் பொருளாளர் கலாபூஷணம் சரவணபவன், பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

1912 ஆம் ஆண்டு இராமகிருஷ்ண மிஷன் சகோதரி அவபாமியா அம்மையாரால் விவேகானந்தா பாடசாலைக்கு அடிக்கல் நடப்பட்டது .

அதன் பின்னர் விவேகானந்தா பாடசாலை 1926 ஆம் ஆண்டு சுவாமி விபுலானந்த அடிகளாரிடம் கையளிக்கப்பட்டது.

100 வருடங்கள் கடந்த நிலையில் பாடசாலை வளாகத்துக்குள் சுவாமி விவேகானந்த அடிகளாருக்கு சிலை நிறுவப்பட வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக பிரதேச மக்களாலும், கல்விமான்களாலும் விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.









# ஹட்டன் தொழில் ஆணையாளர் அலுவலக பகுதியில் குப்பைகள்!

## அகற்ற நடவடிக்க எடுக்குமாறு கோரிக்கை



(மஸ்கெலியா )

ஹட்டன் தொழில் ஆணையாளர் அலுவலகத்துக்கு அருகாமையில் குப்பைகள் குவிந்து கிடப்பதால், அந்த அலுவலக ஊழியர்கள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள மக்களும், அலுவலகத்துக்கு வந்து போவோரும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்தத் தொழில் ஆணையாளர் அலுவலகத்துக்குத் தினமும் ஏராளமானோர் வந்து பல்வேறு பணிகளை மேற்கொள்கின்றனர்.

ஹட்டன் டிக்கோயா மாநகர சபை, இந்த இடத்தில் குப்பைகளைப் போடத் தடைவிதித்துள்ள நிலையில் அறிவிப்பு பலகைகள் வைக்கப்பட்டுள்ள போதிலும், அது தொடர்பில் எவ்வித அக்கறையும் இன்றி இந்த நிலை தொடர்கிறது.

இந்த இடத்தில் குப்பை கொட்டுவதால் துர் நாற்றம் வீசுகிறது.

ஆகையால் ஹட்டன் டிக்கோயா நகர சபை முன் வந்து உடன் குப்பைகள் அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

அந்த இடத்தில் குப்பைகள் போடுவோர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க நகர சபை அதிகாரிகள் முன் வர வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மன்னாரில் விவசாயிகளது ஆர்ப்பாட்டம் கலந்துரையாடலில் சுமூகத் தீர்வு எட்டியது

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் பிரதான கட்டுக்கரைக் குளத்தின் கீழ் 2024 ஆம் ஆண்டுக்கான மன்னார் மாவட்ட சிறுபோக நெற்செய்கைக்கான புலவுகளை தெரிவு செய்ததில் அதிகாரிகளின் தனிப்பட்ட பழிவாங்கல்களால் நெடுங்கண்டல் மற்றும் அயல் கிராம விவசாயிகளுக்கு அநீதி இழைக்கப்பட்டதாகத் தெரிவித்து நேற்று திங்கள்கிழமை (13) காலை மாந்தை மேற்கு பிரதேச பகுதி விவசாயிகள் மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக ஆர்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதில் அதிகமான ஆண், பெண் விவசாயிகள் கலந்து கொண்டதுடன் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மன்னார் பிரதேச சபை முன்னாள் தவிசாளர் முஜாகீர் உட்பட பல முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

அத்துடன் விவசாயிகளது கோரிக்கைகளைக் கொண்ட மகஜர் ஒன்றும் அரச அதிபருக்கு கையளிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து பிற்பகல் ஒரு மணியளவில் மன்னார் அரச அதிபர் தலைமையில் நெடுங்கண்டல் விவசாய பிரதிநிதிகளுடன் கூட்டம் நடைபெற்றது.



இதில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் பிரஜைகள் குழுத் தலைவர் அருட்தந்தை மாக்கஸ் அடிகளார மற்றும் கமநல சேவை உதவி ஆணையாளர், நீர்பாசனத் திணைக்கள பொறியியலாளர் மற்றும் கட்டுக்கரைக்குள வதிவிட திட்ட முகாமையாளர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.


இங்கு நடைபெற்ற அரச அதிகாரிகளுக்கும் விவசாயிகளின் பிரதிகளுக்கும் இடையே நடைபெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து சுமூகமான முடிவுகள் எடுக்கப்பட்டன.

நெடுங்கண்டல் வாய்க்கால் திறக்கப்படுவதாகவும் புலவுக் காணிகள் அளக்கப்பட்டு குறிப்பிட்டவர்களுக்கு ஈவு வழங்குவதாகவும் இதன்பொது தெரிவிக்கப்பட்டது.

# மன்னார் கமநல அமைப்புக்களைச் சேர்ந்தோர் அதிகாரிகளுக்குக் கௌரம் வழங்க வேண்டும்!

## அரச அதிபர் கனகேஸ்வரன் தெரிவிப்பு

(வாஸ் கூஞ்ஞ)



மன்னார் நெடுங்கண்டல் வாய்க்கால் மூடப்பட்டதைக் கண்டித்து மாந்தை மேற்கு பகுதி விவசாயிகளால் முன்னெடுக்கப்பட்ட கண்டனப் போராட்டத்தைத் தொடர்ந்து அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் நெடுங் கண்டல் விவசாயிகள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேற்றப்பட் டுள்ளன என்று அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மன்னார் கமநல அமைப் புக்களைச்சேர்ந்தோர் அதிகாரிகளுக்குக் கௌரம் வழங்க வேண்டும் என்றும் அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

நேற்று திங்கள்கிழமை (13) மாந்தை மேற்கு பகுதி விவசாயிகளால் நடத்தப் பட்ட கண்டன பேரணியின்போது இவர் களால் அரச அதிபருக்கு வழங்கப்பட்ட மகஜரின் கருத்தை அடிப்படையாகக் கொண்டு நேற்று (13) விவசாயிகளின் பிரதிநிதிகள் , விவசாயம் தொடர்பான அதிகாரிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், பிரஜைகள் குழுத் தலைவர் அருட்பணி மாக்கஸ் அடிகளார் ஆகியோருடன் அரச அதிபர் தலைமையில் மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது அரச அதிபர் க.கன கேஸ்வரன் இது தொடர்பாக ஊடகங்க ளுக்கு கருத்து தெரிவிக்கையில்,

மன்னார் நெடுங்கண்டல் விவசாயிக ளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டன. நெடுங்கண்டல் பகுதியில் இதற்கு அண்டிய மூன்று கிராமங்களில் இருந்து இதுவரை சிறுபோக நெற் செய்கைக்கு விண்ணப் பிக்காதவர்களுக்கு ஈவு வழங்கப்படும்.

இதற்கான நிள அளவை உதவி மாவட்ட செயலாளர், கமநல உதவி ஆணையாளர் ஆகியோர் உடனடியாகச் சென்று மேற்கொண்டனர்.

இவ்வருடத்துக்கான சிறுபோக நெற் செய்கையை மேற்கொள்ளவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் மத்தியில் இருந்து நடைபெற்ற தவறுகளுக்கு அவர்கள் பகிரங்கமாக மன்னிப்பு கேட்டுள்ளனர். கமநல உதவி ஆணையாளர் ஒரு சிறந்த சேவையாளர்.

எதிர்காலத்தில் அதிகாரிகள் பொது மக்களுக்கு சேவை செய்ய வரும் பொழுது அவர்களுக்கு உரிய கௌர வத்தை மன்னார் மாவட்டத்திலுள்ள கமநல அமைப்புக்கள் வழங்க வேண்டும்.

85 கமநல அமைப்புக்கள் 10 வாய்க் கால்கள் அமைப்புக்கள் யாவரும் சேர்ந்து ஏற்கனவே எடுத்துக் கொண்ட தீர்மா னத்தை கவனத்தில் எடுத்தே நெடுங் கண்டல் சம்பவம் தீர்மானிக்கப்பட்டது.

இருந்தும் நெடுங்கண்டல் அமைப்பி னரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் கவனத்தில் கொண்டும் நெடுங்கண்டல் புலவுப்பகுதி ஒரு சிறப்பான விவசாய பகுதி என்பதையும் கவனத்தில் கொண்டு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் குறிப் பிட்ட திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டமையால் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட - விவசாயிகளை பாதிக்காதவகையில் நெடுங்கண்டல் விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு மூன்று கிராம விவசாயிகளும் சிறுபோகம் செய்யத் தீர்மானிக்கப்பட் டுள்ளது.- என்றார்.

# மன்னார் ஆஸ்பத்திரியில் சர்வதேச தாதியர் தினம்





(மன்னார்)

சர்வதேச தாதியர் தினத்தை முன் னிட்டு அர்பணிப்புடன் சேவையாற்றும் தாதியர்களை கௌரவிக்கும் முகமாக மன்னார் பொது வைத்தியசாலை தாதியர்களின் ஏற்பாட்டில் நேற்று (13) திங்கட்கிழமை காலை சர்வதேச தாதி யர் தின நிகழ்வு இடம்பெற்றது.

மன்னார் பொது வைத்திய சாலையில்தாதிய உத்தியோகத்தர்களுக் கான உட்கட்டமைப்பு வசதிகள், மற்றும் தாதிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக காணப்படுகின்ற போதும் அர்ப் பணிப்போடு செயல்படும் தாதிய உத்தி யோகத்தர்களுக்கான கௌரவத்தை வழங்கும் முகமாக நிகழ்வு ஒழுங்க மைக்கப்பட்டது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் எம்.ஏச்.எம். அசாத், கௌரவ விருந்தினராக மன்னார் பிராந் திய சுகாதார சேவை பணிமனையின் பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஒஸ்மன் டெனி, மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை பிரதி பணிப்பாளர் யோகேஸ்வரன், வைத்திய நிபுணர்கள், பொது வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர்,வைத்திய சாலையின் தாதிய பரிபாலகர் மற்றும் ஓய்வு நிலை பரிபாலகர்,சுகாதார ஊழியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் தாதிய உத்தியோகஸ்தர் களால் கலை நிகழ்வுகளும் ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தன.



# மும்பையில் விளம்பரப் பதாகை சரிந்து விழுந்தில் 14 பேர் சாவு!

## 74 பேருக்குப் படுகாயம்; புழுதிப்புயலால் நேர்ந்த அனர்த்தம்

மும்பை,மே14

மராட்டியத்தில் விளம்பரப் பதாகை சரிந்து விழுந்து விபத்துக்குள்ளான சம்பவத்தில் பலியானோர் எண்ணிக்கை 14 ஆக உயர்ந்துள்ளது.

மராட்டிய மாநிலம் மும்பையில் நேற்று மாலை திடீரென புழுதிப்புயல் வீசியது. புழுதிப்புயலுடன் கனமழையும் பெய்தது. அப்போதே விளம்பரப் பலகை சரிந்து வீழ்ந்த பேரனர்த்தம் நிகழ்ந்தது.

மும்பையின் காட்கோபர் பகுதியில் பெட்ரோல் நிரப்பு நிலையத்தை ஒட்டி இரும்பு சாரங்களுடன் 100 அடி உயர விளம்பரப் பதாகை வைக்கப்பட்டிருந்தது. நேற்று மாலை வீசிய புழுதிப்புயலில் விளம்பர பதாகை இரும்பு சாரங்களுடன் சரிந்து விழுந்தது. இதில் நிரப்பு நிலையம் மற்றும் அருகில் இருந்த வீடுகள் நொறுங்கின. மேலும், இந்த சம்பவத்தில் விளம்பர பதாகைக்குள் பலர் சிக்கிக்கொண்டனர். விரைந்து வந்த பொலிஸார் மற்றும் மீட்புக்குழுவினர் விளம்பர பதாகைக்குள் சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். இந்த சம்பவத்தில் நேற்று 9 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன.

இதையடுத்து மீட்புப்பணிகள் தொடர்ந்து நடைபெற்ற நிலையில் விபத்துக்குள்ளான இடத்தில் இருந்து மேலும் 5 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. இதனால் விளம்பர பதாகை விழுந்து விபத்துக்குள்ளான சம்பவத்தில் பலியானோர் எண்ணிக்கை 14 ஆக அதிகரித்துள்ளது.

மேலும், இச்சம்பவத்தில் 74 பேர் படுகாயமடைந்துள்ளனர். படுகாயமடைந்த அனைவரும் அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மீட்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதனிடையே, விளம்பர பதாகை வைத்த நிறுவனம் மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வாரணாசியில் மோடி வேட்புமனுத் தாக்கல்

CLICK HERE VIDEO





இந்தியாவில் நடைபெற்றுவரும் தேர்தல்களில் உத்தர பிரதேசத்தின் வாரணாசி தொகுதியில் பிரதமர் மோடி போட்டியிடுகிறார். 3ஆவது முறையாக வாரணாசி தொகுதியில் போட்டியிடும் பிரதமர் மோடி, இதில் வெற்றி பெற்று 3ஆவது முறையாக ஆட்சியமைக்கும் முனைப்பில் உள்ளார்.

வாரணாசி ஆட்சியர் அலுவலகத்தில் பிரதமர் மோடி இன்று மதியம் வேட்புமனுவைத் தாக்கல் செய்துள்ளார். அபிஜித் முகூர்த்தம் என்ற அரிதான முகூர்த்தத்தில் பிரதமர் வேட்புமனு தாக்கல் செய்தார். பிரதமரின் வேட்புமனுவை 4 பேர் முன்மொழிந்து கையெழுத்திட்டனர். அப்போது பிரதமருடன் மத்திய மந்திரிகள் அமித்ஷா, ராஜ்நாத் சிங், பா.ஜ.க. தலைவர் ஜே.பி.நட்டா உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

வேட்புமனு தாக்கல் செய்த பிரதமர், அதன் பின்னர் வாகன பேரணியில் பங்கேற்றார். இந்த வாகன பேரணியில் பிரதமர் மோடியை வரவேற்க பா.ஜ.கவினர் பல சிறப்பு ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

வருகிற ஜூன் முதலாம் திகதி 7 ஆவது மற்றும் கடைசி கட்ட தேர்தலின் போது இந்தத் தொகுதிக்கான வாக்குப் பதிவானது நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவின் ஏழு நட்பு நாடுகளுக்கு வடகொரியா கடும் எச்சரிக்கை விடுப்பு!

## இராணுவத் தலையீட்டை நிறுத்தும்படி மிரட்டல்



பியாங்யாங்,மே14

ஐ.நா.வின் தடைகளை மீறும் செயலை கண்காணிக்கிறோம் என்ற பெயரில் அமெரிக்காவின் நட்பு நாடுகள், ஆசிய பசிபிக் பகுதியில் இராணுவத் தலையீட்டில் ஈடுபடும் செயலை நிறுத்திக்கொள்ளும்படி வட கொரியா எச்சரித்து உள்ளது.

அமெரிக்காவின் கூட்டணி நாடுகளான இங்கிலாந்து, கனடா, ஜெர்மனி, பிரான்ஸ், நியூசிலாந்து மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளிடம் ஆசிய பசிபிக் பகுதியில் ராணுவ தலையீட்டை உடனடியாக நிறுத்தி கொள்ளும்படி வடகொரியா எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடந்த ஏப்ரலில், கொரியத் தீபகற்ப பகுதியருகே கடல்வழிப் பகுதிகளில் தென்கொரியா மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகள் கூட்டாக ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டன.

தென்கொரியா மற்றும் ஜப்பானுடன் சேர்ந்து கடந்த மாதம் அமெரிக்காவும் 2 நாள்கள் கடற்படை பயிற்சியில் ஈடுபட்டது. இந்த மாதத் தொடக்கத்தில், ஆஸ்திரேலியாவின் ஹெலிக்கொப்டர் ஒன்று வடகொரிய பகுதியில் ஆய்வில் ஈடுபட்டது.

இதனை சர்வதேச வான்வெளியில் வைத்து சீனாவின் போர் விமானம் வழிமறித்தது. கடந்த அக்டோபரில், இதேபோன்ற சூழலில், கனடாவின் விமானம் ஒன்று இடைமறிக்கப்பட்டது.

வடகொரியாவுக்கு எதிரான ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலின் தடை மற்றும் தீர்மானங்களை அமுல்படுத்தும் நோக்கில் இந்நடவடிக்கை எடுக்கப்படுகிறது என தென்கொரியாவின் பாதுகாப்பு அமைச்சகம் அப்போது தெரிவித்தது.

இந்நிலையில், ஐ.நா.வின் தடைகளை மீறும் செயலைக் கண்காணிக்கிறோம் என்ற பெயரில் அமெரிக்காவின் நட்பு நாடுகள், ஆசிய பசிபிக் பகுதியிலிராணுவ தலையீட்டில் ஈடுபடும் செயலை உடனடியாக நிறுத்தி கொள்ள வேண்டும் என வடகொரியா கூறியுள்ளது.

வடகொரியா தன்னுடைய இறையாண்மையை பாதுகாக்க முழு அளவிலான தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று அந்நாட்டின் வெளியுறவு அமைச்சகம் எச்சரித்துள்ளது.

மேற்கத்திய நாடுகள் காரணமேயின்றி மற்றும் கண்மூடித்தன கொள்கைகளால் அமெரிக்காவை பின்பற்றுவது என்பது அவர்களுடைய சொந்த நலன்களுக்கு தீங்கு ஏற்படுத்தும் செயலாகும் என்ற உண்மையை புரிந்து சிந்தித்து செயல்பட வேண்டும் என்றும் வடகொரியா தெரிவித்துள்ளது. மண்டல அளவிலான பதற்றங்களை தூண்டும் செயலை நிறுத்தி கொள்ள வேண்டும் என்றும் அது எச்சரித்து உள்ளது.

2022 ஆம் ஆண்டு தொடக்கத்தில் இருந்தே கொரிய தீபகற்ப பகுதியில் பதற்றம் அதிகரித்தே காணப்படுகின்றது. அணு ஆயுத ஏவுகணைகள் உள்பட ஆயுத பரிசோதனைகளை வடகொரியா அதிகரித்தது.

அமெரிக்கா மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகளை எதிரிகளாக கருதும் வடகொரியா அந்நாடுகளுக்கு எதிரான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியது.

இந்நிலையில், கடந்த சனிக்கிழமை மற்றும் ஞாயிற்று கிழமைகளில் ஆயுத தொழிற்சாலைகளுக்கு கிம் ஜாங் அன் நேரில் சென்று பார்வையிட்டார். உயர்ரக துப்பாக்கிகள் மற்றும் ஏவுகணை லோஞ்சர்கள் உள்ளிட்ட ஆயுதங்களைத் தனிப்பட்ட முறையில் ஆய்வு மேற்கொண்டார்.

அவருடன் சகோதரி கிம் யோ ஜாங் உள்ளிட்ட உயரதிகாரிகளும் சென்றிருந்தனர். இந்த ஆய்வில், ஆயுதங்களின் தரம் பற்றி கிம் புகழ்ந்து கூறியமையுடன், உற்பத்தி திட்டங்களை தடையின்றி அமுல்படுத்தும்படி தொழிற்சாலைகளை கேட்டு கொண்டார்.

# குழந்தைகள் சமூக ஊடகங்களை பயன்படுத்த தெற்கு ஆஸியில் தடை

கான்பெரா,மே14

ஆஸ்திரேலியாவிலேயே முதன் முறையாக தெற்கு மாகாணத்தில் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் சமூக ஊடகங்கள் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இன்றைய நவீன உலகில் சமூக ஊடகங்களை பயன்படுத்தாதவர்களே இல்லை என்ற அளவுக்கு அது முக்கிய பங்கு வகிக்கிறது. அதேசமயம் இதனை பயன்படுத்துவதால் பல்வேறு தீமைகளும் ஏற்படுகின்றன.

குறிப்பாக குழந்தைகளின் உடல் ஆரோக்கியம், மன வளர்ச்சிக்கு சமூக



ஊடகங்கள் பெரும் தீங்கு விளைவிக்கின்றன். மேலும் சமூக ஊடகங்களிலேயே அவர்கள் மிகுதியான நேரத்தை வீணடிக்கின்றனர். எனவே ஆஸ்திரேலியாவிலேயே முதன்முறையாக தெற்கு ஆஸ்திரேலியா மாகாணத்தில் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் சமூக ஊடகங்கள் பயன்படுத்த தடை விதிக்கப்படும் என முதல்-மந்திரி பீட்டர் மலினஸ்காஸ் அறிவித்துள்ளார்.

அதன்படி சிறுவர்கள் சமூக ஊடகங்களை பயன்படுத்த பெற்றோரின் ஒப்புதல் அவசியம். இதற்கான நடைமுறையை ஆராய முன்னாள் தலைமை நீதிபதி ராபர்ட் பிரெஞ்ச் தலைமையிலான ஒரு குழுவையும் அரசாங்கம் நியமித்துள்ளது. அரசின் இந்த அறிவிப்புக்கு பல்வேறு தரப்பினரும் ஆதரவு தெரிவித்து உள்ளனர்.

பக்கங்கள் - 5

# கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 14/05/2024

## வீடுகளின் வெப்பச் சீராக்கல் முறை மாற்றத்துக்கு உதவி!

### பிரிட்டிஷ் கொலம்பியாவில் நடவடிக்கை

பிரிட்டிஷ் கொலம்பியா, மே 14
பிரிட்டிஷ் கொலம்பியா மற்றும் மத்திய அரசாங்கங்கள் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம்

C2 ▶

# பல்கலைக்குள் சிறு கிராமமாக பலஸ்தீன ஆதரவு கூடாரங்கள்

## மெக்கில் பல்கலை சட்டத்தரணி மன்றில் விசனம்




கியூபெக், மே 14

மெக்கில் பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள பலஸ்தீன ஆதரவு கூடாரங்கள் எல்லைகள மைக்கப்பட்ட சிறு கிராமமாக மாறியுள்ளதாக மெக்கில் பல்கலைக்கழகம் சார்பிலான சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இந்த கூடாரங்கள் பல்கலைக்கழக வளாகங்களில் சுகாதார மற்றும் பாதுகாப்பு ஆபத்துக்களை உருவாக்கியுள்ளன எனப் பல்கலைக்கழக சட்டத்தரணி ஜெக்கியு டார்சே குறிப்பிட்டுள்ளார்.

C2 ▶




# கனடாவின் மேற்குப் பகுதியில் பெருமளவில் காட்டுத்தீ பரவல்



## காற்றின் தரம் மாசடைவு குறித்து எச்சரிக்கை

பிரிட்டிஷ் கொலம்பியா, மே 14
கனடாவின் மேற்குப் பகுதியில் காட்டுத்தீ பெருமளவில் பரவ ஆரம்பித்துள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியா மற்றும் அல்பேர்ட்டா வடபகுதியில் காட்டுத்தீயின் வேகம் அதிகரித்துள்ள நிலையில், கனடாவின் மேற்குப் பகுதியில் வானம் முழுவதிலும் புகைமூட்டமாக

C2 ▶




# வெளிநாட்டு மாணவர்கள் கனடாவில் நிரந்தர வதிவுரிமை பெறும் வழிமுறை

வெளிநாட்டு மாணவர்கள் எவ்வாறு கனடாவில் எவ்வாறு நிரந்தர வதிவுரிமை (Permanent Residency) பெற்றுக்கொள்ள முடியும் என்பது குறித்த அறிவுறுத்தல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

கனடிய குடிவரவு குடியகல்வு திணைக்களத்தினால் இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

வெளிநாடுகளிலிருந்து கனடாவிற்கு வந்து உயர்கல்வியை பூர்த்தி செய்யும் மாணவர்கள் நிரந்தரமாக வதிவதற்கு பல்வேறு வழிகள் காணப்படுகின்றன.

முதலாவது பட்டப்படிப்பின் பின்னர் பணி அனுமதி என்னும் முறையின் கீழ் விண்ணப்பம் செய்ய முடியும்.

இரண்டாவது விரைவு நுழைவு முறைமையின் ஊடாக வெளிநாட்டுப் பட்டதாரிகள் நிரந்தர வதிவுரிமைக்காக விண்ணப்பிக்க முடியும்.

வயது, கல்வி, மொழியறிவு, தொழில் வரலாறு உள்ளிட்ட பல்வேறு காரணிகளின் அடிப்படையில் இந்த விண்ணப்பதாரிகளுக்கு புள்ளிகள் வழங்கப்படும்.

மூன்றாவதாக கனடிய தொழில் அனுபவத்தின் அடிப்படையிலும் விண்ணப்பம் செய்ய முடியும்.

நான்காவது வழியாக பி.என்.பி முறைமையின் ஊடாகவும் நிரந்தர வதிவுரிமைக்காக விண்ணப்பம் செய்ய முடியும். கனடாவின் பெரிய மாகாணங்கள் இந்த திட்டத்தின் கீழ் நிரந்தர வதிவுரிமை வழங்குகின்றன.

2025 ஆண்டளவில் பி.என்.பி முறையின் கீழ் ஒரு லட்சத்து பத்தாயிரம் பேருக்கு நிரந்தர வதிவுரிமை வழங்கப்பட உள்ளது. அட்லாண்டிக் குடிவரவுத் திட்டத்தின் ஊடாகவும் நிரந்தர வதிவுரிமைக்காக விண்ணப்பம் செய்ய முடியும்.

இதேவேளை அட்லாண்டிக் மாகாணங்களில் தகுதி வாய்ந்த வெளிநாட்டு பணியாளர்கள் பணிக்கு அமர்த்தப்படுவர்.

மேலும் அண்மையில் பட்டப் படிப்பைப் பூர்த்தி செய்து கொண்ட வெளிநாட்டு மாணவர்களுக்கும் இதில் சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது.

கிராமிய மற்றும் வடக்கு குடிவரவு பரீட்சார்த்த திட்டத்தின் ஊடாகவும் இந்த நிரந்தர வதிவுரிமை பெற்றுக்கொள்ள முடியும்.

விவசாய மற்றும் உணவு பரீட்சார்த்த குடிவரவுத் திட்டத்தின் ஊடாகவும் நிரந்தர வதிவுரிமை பெற்றுக்கொள்ள முடியும்.

குறிப்பாக விலங்கு வேளாண்மை, பசுமை விவசாயம், இறைச்சி பதப்படுத்தல் போன்ற தொழில்துறைகளிலும் சர்வதேச மாணவர்களுக்கு வாய்ப்பு உண்டு என தெரிவிக்கப்படுகின்றது.

**பல்கலைக்குள்...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனவே, இரண்டு வாரங்களாகக் காணப்படும் இந்த கூடாரங்களை நீக்குவதற்கு உத்தரவிடுமாறு அவர் நீதிமன்றில் கோரியுள்ளார்.

வெளிப்பாட்டுச் சுதந்திரத்திற்கான உரிமையை தாம் மதிக்கின்றார் எனவும், போராட்டத்திற்கு உகந்தது அல்லாத இடங்களில் அமைக்கப்பட்டுள்ள கூடாரங்கள், ஆக்கிரமிப்பு கூடங்களாக மாறியிருக்கின்றன என ஜெக்கியு குறிப்பிட்டுள்ளார்.

எனினும், போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் போராடுவதற்கான உரிமையை நியாயப்படுத்தியுள்ளனர்.

**கனடாவின்...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காணப்படுகின்றது.

இந்த காட்டுத்தீயின் வேகமானது அப்பகுதியில் உள்ள சமூகங்களுக்கு மாத்திரமன்றி, அதனைச் சூழவுள்ள பகுதிகளுக்கு காற்றின் தரம் குறித்த கரிசனைகளையும் அதிகரித்துள்ளது.

காட்டுத் தீ பரவல் காரணமாக கனடாவின் ஐந்து மாகாணங்கள் மற்றும் ஓர் பிராந்திய மக்களுக்கு காற்றின் தரம் மாசடைவு குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியா, அல்பேர்ட்டா, சஸ்கற்றுவான், ஒன்றாரியோ, கியூபெக் மாகாணங்களிலும் வடமேற்கு பிராந்தியத்திலும் காற்றின் தரம் மாசடைதல் குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கனடாவில் காட்டுத் தீ பரவுகை பருவ காலம் ஆரம்பமாகியுள்ளது. கனடவில் தற்பொழுது சுமார் 90 இடங்களில் காட்டுத் தீ பரவியுள்ளதாகவும் இதில் 12 இடங்களில் நிலவி வரும் காட்டுத் தீயானது கட்டுக்கு அடங்காதவை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

**வீடுகளின் வெப்ப...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட குடும்பங்களை

மையமாகக் கொண்டு வீட்டு வெப்பமாக்கல் மற்றும் குளிரூட்டும் அமைப்புகளை அதிக காலநிலைக்கு ஏற்ற விருப்பங்களாக மாற்ற தள்ளுபடிகளை விரிவுபடுத்தும் நோக்கில் 254 மில்லியன் டொலர்களை ஒதுக்கியுள்ளன.

சுற்றுச்சூழல் கனடா மற்றும் பிரிட்டிஷ் கொலம்பியாவின் எரிசக்தி அமைச்சு என்பன இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில், மத்திய அரசாங்கம் 103.7 மில்லியன் டொலர்கள் வழங்கவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் வருமானத் தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் தற்போது எண்ணெயுடன் சூடேற்றப்பட்ட வீடுகளில் அதிக திறன் கொண்ட வெப்பப் பம்புகளுக்கு மாறுவதற்கு 16,000 டொலர்கள் வரை பெறலாம் என்றும், மத்திய அரசின் சமீபத்திய ஆதரவு இயற்கை எரிவாயு மற்றும் புரொபேன் மூலம் சூடேற்றப்பட்ட வீடுகளும் தகுதியுடையனவாக இருக்கலாம் என்று கூறுகிறது.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் முந்தைய தள்ளுபடி திட்டத்தில் இருந்து 70-சதவீத ஆதரவை இது பிரதிபலிக்கிறது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# தமிழ்ப் பட திரையரங்குக்கு ஸ்காபரோவில் தீ வைப்பாம்

## பொலிஸ் விசாரணை ஆரம்பம்

ஒன்ராரியோ, மே 14

ஸ்காபரோவில் உள்ள திரையரங்கில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை தீ வைக்கப்பட்ட சம்பவம் நிகழ்ந்தது குறித்து டொரன்டோ பொலிஸார் விசாரணகளை ஆரம்பித்துள்ளனர்.

வூட்சைட் திரையரங்கம் என அறியப்படும் இந்த திரையரங்கில் அதிகளவில் தமிழ்ப் திரைப்படங்களே வெளியாகுவது குறிப்பிடத்தக்கது.

மே 12ஆம் திகதி அதிகாலை 4:00 மணியளவில் தீ வைக்கப்பட்ட சம்பவம் குறித்துத் தமக்கு தகவல் கிடைத்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதிகாரிகள் சம்பவ இடத்தை சென்றடைந்த போது, டொரன்டோ தீயணைப்புபடையினரால் தீ அணைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

தீயினால் திரையரங்கின் முன் கதவுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

விசாரணைகள் தொடரும் நிலையில் சந்தேக நபர்கள் குறித்த விவரங்கள் எதுவும் இதுவரை வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கனடாவின் தொழில்துறை வலுவில் செயற்கை நுண்ணறிவின் தாக்கம்!

## விசாரணைக்குழு அறிக்கையில் விவரிப்பு



ஒன்ராரியோ, மே 14

செயற்கை நுண்ணறிவானது கனடாவின் தொழில்வலுவில் தாக்கத்தை ஏற்படுத்தும் என நாடாளுமன்ற விசாரணைக்குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை எதிர்கொள்வதற்கான வழிகளையும் இந்தக் குழு பரிந்துரைத்துள்ளது.

மிகவும் துரிதமான வகையில் செயற்கை நுண்ணறிவு தொழிநுட்பமானது நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தொழிநுட்ப மாற்றங்கள் இடையூறாக இருந்த போதிலும், உற்பத்தித்திறன் மற்றும் வளர்ச்சியின் அடிப்படையில் நன்மைகளும் இருப்பதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

புதிய தொழிநுட்பத்தினால் தொழிலாளர்கள், தொழில்கள் மற்றும் தொழில் சந்தைக்கு ஏற்படும் தாக்கங்கள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டியது அவசியம் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.



# இஸ்ரேலின் தேசிய தினமான இன்று ஒட்டாவாவில் கொடியேற்றம் எங்கு?

## முற்கூட்டியே இடம் அறிவிக்க மறுப்பு

ஒன்ராரியோ, மே 14

ஒட்டாவாவில் இன்றைய தினம் இஸ்ரேலிய கொடியேற்றும் நிகழ்வு பொது நிகழ்வாக நடைபெறாது என ஒட்டாவா நகர சபை தெரிவித்துள்ளது.

இஸ்ரேலின் தேசிய தினத்தையொட்டிய இந்த நிகழ்வினை நடத்துவதற்கு ஒட்டாவா யூத சம்மேளனத்திற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ள போதிலும், எப்போது, எங்கே நடைபெறும் என்கிற தகவல்களை வழங்க முடியாது என நகர சபையில் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுப் பாதுகாப்பு காரணங்களுக்காக இந்த நிகழ்வு நடைபெறாது என கடந்த வாரம் நகர சபை தெரிவித்திருந்தது.

இதனையடுத்து மேயர் மாரக் சுட்கிளிப் உள்ளிட்ட உள்ளூர் மற்றும் மத்திய அரசின் அரசியல்வாதிகள் கவலை வெளியிட்டிருந்தனர்.

பொலிஸ் அதிகாரிகள் மற்றும் நகர அதிகாரிகளிடம் நிகழ்வை பாதுகாப்பாக நடத்துவதற்கான வழிகள் குறித்து ஆராயுமாறு கடந்தவாரம் நகர மேயர் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# கடும் குற்றங்களைப் புரிந்தவர்கள் தங்கள் பெயர்களை மாற்றத் தடை

## பிரிட்டிஷ் கொலம்பியாவில் புதிய சட்டம் அறிமுகம்

பிரிட்டிஷ் கொலம்பியா, மே 14

பிரிட்டிஷ் கொலம்பியாவில் கடும் குற்றங்களைப் புரிந்தவர்கள் தமது பெயர்களை மாற்றுவதற்கு தடை விதிக்கும் வகையில் புதிய சட்டம் ஒன்றை பிரிட்டிஷ் கொலம்பியா அறிமுகம் செய்யவுள்ளது.

அபாயகரமான குற்றங்களைப் புரிந்தமைக்காக குற்றம் சுமத்தப்பட்டவர்கள் தமது பெயர்களை மாற்றாதிருப்பதனை உறுதி செய்வதற்கு மாகாணத்தின் பெயர்கள் சட்டத்தினை இந்த உத்தேச சட்டமூலம் திருத்தியமைக்கும் என மாகாண சுகாதார அமைச்சர் எட்ரியன் டிக்ஸ் தெரிவித்துள்ளார்.

சிறுவர்–கொலையாளியாக குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஒருவர் தமது பெயரை மாற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட்டமை குறித்து அறிந்தமையினால், பிரிட்டிஷ் கொலம்பியாவின் எதிர்கட்சித் தலைவர் தனிநபர் சட்டமூலம் ஒன்றை சமர்ப்பித்து மூன்று வாரங்களில் இந்தப் புதிய சட்டமூலம் முன்வைக்கப்பட்டுள்ளது.



# பழங்குடியினத் தலைவர்களுக்கான 2 நாள்கள் மாநாடு வின்னிபெக்கில்

மனிடோபா, மே 14

வின்னிபெக்கில் பழங்குடியின தலைவர்களுக்கான இரண்டு நாள்கள் மாநாடு இன்று ஆரம்பமாகவுள்ளது.

இந்த மாநாட்டில் நாடு முழுவதிலும் இருந்து பழங்குடியினத் தலைவர்கள் கலந்து கொண்டு, பழங்குடியின அடையாள மோசடிக்கு எவ்வாறு பதிலளிக்கின்றார்கள் மற்றும் அதனை எவ்வாறு இல்லாது செய்வது என்பது தொடர்பில் கலந்துரையாடவுள்ளனர்.

மனிடோபா மெட்டிஸ் கூட்டமைப்பு மற்றும் ஒன்டாரியோவின் தலைவர்கள் இணைந்து நடத்தும் கூட்டத்தில், இனுவிட் பழங்குடியினத் தலைவர்களும் அடங்குவார்கள்.

# மத்திய கிழக்கு, மத்திய தரைக்கடல் நாடுகளுக்கு வெளிவிவகார அமைச்சர் மெலானி ஜொலி விஜயம்

ஒன்ராரியோ, மே 14

மத்திய கிழக்கு மற்றும் மத்திய தரைக்கடல் பகுதிகளுக்கு வெளிவிவகார அமைச்சர் மெலானி ஜொலி விஜயம் செய்யவுள்ளார்.

நேற்று மே 13ஆம் திகதி புறப்பட்ட வெளிவிவகார அமைச்சர், சைப்ரஸ், லெபனான், துருக்கி மற்றும் கிரேக்கம் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்யவுள்ளார் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் தொடர்ந்து மாறிவரும் சூழ்நிலையானது கனடாவிலும் தாக்கத்தை ஏற்படுத்துவதாக அமைச்சர் மெலானி ஜொலி குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலைமைகளை தணிப்பதற்கு கனடாவால் எவ்வாறு உதவ முடியும் என்பது தொடர்பில் இந்த விஜயத்தின் போது சம்பந்தப்பட்ட அதிகாகரிளுடன் தாம் கலந்துரையாடவுள்ளார் என அமைச்சர் ஜொலி தெரிவித்துள்ளார்.





## தன்னுடன் சேர்ந்து 4 பேர் சாகக் காரணமான

# விபத்தை ஏற்படுத்திய சாரதிக்கு வாகனம் ஓட்ட தடை இருந்ததாம்

ஒன்ராரியோ, மே 14

கடந்த மாதம் பிற்பகுதியில் டொராண்டோவின் நெடுஞ்சாலை 401இல் கிழக்கே தவறான வழியில் பயணித்து பெரும் விபத்துக்குள்ளாக்கிய சாரதி ஏற்கனவே வாகனம் செலுத்தாதிருப்பதற்கான தடையுத்தரவைப் பெற்றவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடையொன்றில் திருட்டில் ஈடுபட்டமைக்காக பொலிஸாரால் விரட்டப்பட்ட இந்த வாகன சாரதி, 401 நெடுஞ்சாலையில் தவறான வழியில் பயணித்தமையால், இந்தியாவைச் சேர்ந்த மூன்று பேர் உயிரிழந்தமையுடன், இருவர் கடும் காயங்களுக்குள்ளாகினர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரான ககன்தீப் சிங்கும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

எனினும், ககன்தீப் சிங்கிற்கு வாகனம் செலுத்துவதற்கான தடை இருந்த நிலையிலேயே, அதனை மீறி அவர் வாகனத்தை செலுத்தியுள்ளமை தெரியவந்துள்ளது.

விட்பியில் திருடப்பட்ட வாகனத்தை வைத்திருந்ததாக சிங் மீது பிப்ரவரி 28 அன்று குற்றம் சாட்டப்பட்டதாக நீதிமன்றப் பதிவுகள் காட்டுகின்றன.

# கொவிட் கட்டுப்பாடுகளுக்கு எதிரான போராட்ட வழக்கில் 9 குற்றச்சாட்டுகள்

## ‘சுதந்திரத் தொடரணி’ தலைவர் பெட் கிங் மீது

ஒன்ராரியோ, மே 14

2022ஆம் ஆண்டு போராட்டம் தொடர்பில் தம் மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை “ஃபிரிடொம் கொன்வொய்“ (சுதந்திரத் தொடரணி) தலைவர் பெட் கிங் மறுத்துள்ளார்.

2022ஆண்டின் ஆரம்பப் பகுதியில் ஒட்டாவாவில் நாடாளுமன்றத்திற்கு அருகே கொவிட் கட்டுப்பாடுகளுக்கு எதிராக போராட்டத்தை வழிநடத்தியமைக்காக இவர் மீது ஒன்பது குற்றச்சாட்டுக்கள் பதிவாகியுள்ளன.

ஓட்டாவாவின் டவுன்டவுன் பகுதியை சில நாள்களுக்கு முழுமையயாக முடக்கிய இந்தப் போராட்டத்தில் வெளிப்படையாக பேசியவராகவும், சமூக ஊடகங்களில் நேரலையாக போராட்டங்களைப் பதிவு செய்வதராகவும் கிங் விளங்குகிறார்.

கறுப்பு உடையணிந்து இந்த வழக்கு விசாரணையில் நேற்று மே 13ஆம் திகதி முன்னிலையான பெட் கிங், தம் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்களை மறுத்துள்ளார்.

தவறாக நடந்துகொண்டமை, ஏனையோரை தவறாக நடப்பதற்கு தூண்டியமை, நீதிமன்ற உத்தரவை அவமதித்தமை, பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தமை, நெடுஞ்சாலையை மறித்தமை போன்ற குற்றச்சாட்டுக்கள் இவர் மீது பதியப்பட்டுள்ளன.

இது அரசியல் சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் இல்லையெனவும், கிங்கின் நடத்தை சம்பந்தப்பட்டது எனவும் அரச சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கு விசாரணை மூன்று வாரங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

